# ஈரோடு மாநகராட்சி
# மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

## திருவள்ளுவராண்டு 2044 ஆடித் திங்கள் 20–ம் நாள்

* * * * *

**2013–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5–ஆம் தேதி (05.08.2013) திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்**

## கூட்ட நடவடிக்கைகள்

**1.** ஈரோடு மாநகராட்சி மற்றும் நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளான வீரப்பன் சத்திரம், காசிபாளையம், பெரிய சேமூர் மற்றும் சூரம்பட்டி ஆகியவற்றை ஒருங்கிணைத்து பாதாள சாக்கடைத்திட்டம் அமைக்க இம்மன்றம் தனது தீர்மான எண்.758 நாள்.30.09.2008-ல் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து அரசு தனது அரசாணை எண்.247 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள். 11.12.2008-ல் ரூ.209.22 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கபட்டது.

அதன்படி மேற்கண்ட பாதாள சாக்கடைத்திட்டப்பணியை 5 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அதன்படி சிப்பம்-1-ல் ஈரோடு பகுதி-1 காசிபாளையம் பகுதி 10 மற்றும் சூரம்பட்டி பகுதி-9-க்கு பாதாள சாக்கடைத்திட்டம் அமைக்க ரூ.59.83 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 25.09.2009-ல் ஒப்பந்தம் கோரப்பட்டு மூன்று ஒப்பந்தங்கள் பெறப்பட்டு அவற்றில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி பெற்றன. அவற்றில் மதிப்பீட்டைவிட 22.38 சதவீதம் அதிகம் வழங்கிய M/s. KRRI-TAPI –JV ஹைதராபாத் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை இம்மாமன்றம் தனது தீர்மானம் எண்.1725 நாள். 13.10.2009-ல் ஒப்புதல் வழங்கி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்பந்தம் உறுதி செய்யும் குழுவிற்கு பரிந்துரை செய்தது. இதனை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக ஒப்பந்தம் இறுதி செய்யும் குழு ஆய்வு செய்து 24.11.2009-ம்தேதியில் அனுமதி அளித்ததை தொடர்ந்து மாமன்றம் தனது தீமான எண்.1866 நாள் 31.12.2009-ல் ஒப்புதல் வழங்கியது. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்தாரருக்கு 20.01.2010-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

அன்னார் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுத்து ஒப்பந்த விதிகளின்படி பணி முன்பணம் ரூ.5.95 கோடி பெற வங்கி பிணைவைப்பு பத்திரம் ஒப்படைப்பு செய்து முன்பணம் ரூ.5.95 22.03.2010-ல் வழங்கப்பட்டது. மேற்கண்ட பணியை 36 மாதங்களில் கீழ்க்கண்டவாறு முடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| முதல் மைல் கல் (ஒரு வருடம்) | 20.01.2010 முதல் 19.01.2011 | 101 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் மற்றும் 3.45 கி.மீ. பம்பிங் மெயின் அமைத்தல். |
| இரண்டாம் மைல் கல் | 20.01.2011 முதல் 19.01.2012 | 151 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள்/பம்பிங்ஸ்டேசன் 70% மற்றும் 2.74 கி.மீ. பம்பிங் மெயின் அமைத்தல் . |

| | | |
|---|---|---|
| மூன்றாம் மைல் கல் | 20.01.2012 முதல் 19.01.2013 | 201.557 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள், பம்பிங் ஸ்டேசன் 100%, பம்பு செட்டுகள் 100% மற்றும் பம்பிங் மெயின் 3.86 கி.மீ. பதித்தல். |

ஆனால் மேற்கண்ட ஒப்பந்ததாரரால் கடந்த 3 1/2 வருடங்களில் கீழ்க்கண்டவாறு பணிகள் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| முதல் மைல் கல் | 20.01.2010 முதல் 19.01.2011 | 27 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டது. மற்றும் பம்பிங் மெயின் ஏதும் பதிக்கப்படவில்லை. |
| இரண்டாம் மைல் கல் | 20.01.2011 முதல் 19.01.2012 | 46 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டது. மற்றும் பம்பிங் மெயின் 1.747 கி.மீ. பதிக்கப்பட்டது. பம்பிங் ஸ்டேசன் இரண்டு எண்ணிக்கை 40%ம் ஒரு எண்ணிக்கை 5% பணிகள் செய்யப்பட்டுள்ளது. |
| மூன்றாம் மைல் கல் | 30.01.2012 முதல் 19.01.2013 | 80 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டது. மற்றும் பம்பிங் மெயின் 2.70 கி.மீ. பதிக்கப்பட்டது. பம்பிங் ஸ்டேசன் மூன்றில் இரண்டு எண்ணிக்கை 40%ம் ஒரு எண்ணிக்கை 5% ம் பணி நடைபெற்றுள்ளது. |
| கால நீட்டிப்புக் காலம் 6 மாதங்கள் | 20.01.2013 முதல் 19.07.2013 | 86.85 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டது. மற்றும் பம்பிங் மெயின் 2.70 கி.மீ. பதிக்கப்பட்டது. பம்பிங் ஸ்டேசன் மூன்றில் இரண்டு எண்ணிக்கை 40%ம் ஒரு எண்ணிக்கை 5% ம் பணி நடைபெற்றுள்ளது. |

அன்னார் முதல் மைல்கல் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி பணி முடிக்காததால் ஒப்பந்த விதி எண்.49-ன்படி ரூ.24.84 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அன்னார் Adjucator-ரிடம் முறையிட்டதன்பேரில் Adjudicator தனது 03.08.2011-ம் தேதிய தீர்ப்பில் திருத்திய Program chart அனுமதிக்கும்படியும் அதன்படி பணி செய்யாவிட்டால் 2-வது மைல்கல்லில் ஒப்பந்த விதிகளின்படி நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கினார். அவர்களின் அறிவுரையை ஏற்று 03.08.2011-ல் திருத்திய Program chart அனுமதிக்கப்பட்டது. அதன்படி அன்னார் பணிசெய்யாததால் இரண்டாவது மைல்கல்லிற்கு ஒப்பந்த விதிப்படி ரூ.7.35 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் அன்னாருக்கு மேற்கண்ட பணியில் அதிக ஆட்கள், பொருட்கள் மற்றும் மெசினரி வைத்து மைல்கல்லில் குறிப்பிட்டபடி பணியை முடிக்க தவறியதால் இவ்வலுவலக கடிதங்கள் 28.10.11, 11.11.11, 05.12.11, 10.12.11, 23.12.11, 30.12.11,12.01.12, 09.02.12, 27.04.12, 09.05.12, 17.05.12, 18.05.12, 04.09.12, 25.09.12, 01.11.12, 14.05.12, 04.01.13, 26.04.13, 03.05.13, 05.06.13, 27.06.13 மூலம் அறிவிப்புகள் வழங்கியும் அன்னார் அதனை உதாசீனப்படுத்தி ஒப்பந்த உடன்படிக்கைப்படி பணியை செய்யவில்லை. மேலும் பணி முன்பணத்திற்கு அன்னாரால் அளிக்கப்பட்டுள்ள வங்கி பிணைவைப்புப் பத்திரத்தை கால நீடிப்பு செய்து தராததால் அவரிடமிருந்து வரவேண்டிய தொகை ரூ.3.71கோடியை 21.01.2013-ல் திரும்பப் பெறப்பட்டது. இதற்கிடையில் மூன்றாவது மைல்கல் முடிவடைந்த நிலையில் மேற்கண்ட ஒப்பந்ததாரர் 16.01.2013-ம் தேதிய கடிதத்தில் 6 மாத காலம் அவகாசம் கொடுத்தால் பணியை முடித்துக் கொடுப்பதாக தெரிவித்ததன்பேரில் அன்னாருக்கு 6 மாதங்கள் கால நீட்டிப்பு 19.01.13 முதல் 20.07.13 முடிய) வழங்கப்பட்டது. இதில் 120 கி.மீ. நீளத்திற்கு 6.85 கிலோ மீட்டர் நீளம் தான் கழிவுநீர்க்குழாய்கள் பதிக்கப்பட்டது. மொத்தத்தில் கடந்த 42 மாதங்களுக்கு மிகக் குறைந்த அளவே அதாவது பதிக்க வேண்டிய 201.557 கி.மீ-க்கு 86.85 கி.மீ. நீளம்தான் இவரால் பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்த வேகத்தில் அன்னார் பணி செய்தால் மேலும் பல ஆண்டுகள் காலதாமதம் ஆகும். எனவே ஒப்பந்ததாரர் M/s. KRRI -TAPI – JV ஹைதராபாத்

நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்த உடன்படிக்கை விதி எண்.59-ன்படி ரத்து செய்ததற்கு சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு கோரப்பட்டது. அரசு வழக்கறிஞர் தனது 09.07.2013-ம் தேதிய குறிப்பில் Show cause notice வழங்கி ஒப்பந்த விதிகளின்படி ரத்துசெய்ய அறிவுரை வழங்கியுள்ளார். இதற்கிடையில் மேற்கண்ட ஒப்பந்ததாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தடைஉத்தரவு கேட்டு வழக்கு தொடர்ந்தார். (வழக்கு எண்.19811/13) உயர்நீதிமன்றம் மேற்கண்ட பணியை ரத்து செய்வது சம்பந்தமாக எந்தவித தடையும் அளிக்காததால் ஒப்பந்ததாரர் M/s. KRRI -TAPI – JV ஹைதராபாத் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்த உடன்படிக்கை விதி எண்.59-ன்படி ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பா.சா.தி.21927/06**

## 666. அனுமதி வழங்கப்பட்டது.

**2.** ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளை சிப்பம் 1 முதல் 5 வரையிலாக பிரிக்கப்பட்டு ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த முறைப்படி பணிகள் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடைபெறும்போது பொது மக்களாலும் தனி நபர்களாலும் ஒப்பந்ததாரர்களாலும் வழக்குகள் தொடரப்பட்டு மாநகராட்சியால் எதிர்த்து வாதாடப்பட்டு வருகிறது.

வழக்கிற்காக எதிர்வாதுரை செய்ய மாநகராட்சி சார்பில் வழக்கிற்கு ஏற்ற வகையில் வழக்கறிஞரை நியமனம் செய்ய வேண்டியுள்ளதாலும், ஒப்பந்தப்பணிகள் குறித்து உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞர் அவ்வப்போது கருத்துரை கோர வேண்டியும் உள்ளது.

ஆகவே பாதாள சாக்கடைத் திட்ட பணிகள் குறித்து எழுப்பப்படும் உள்ளூர் வழக்குகள் மற்றும் உயர்நீதி மன்றத்தில் தொடரப்படும் வழக்குகளை அதற்குரிய வழக்கறிஞர்களை அமர்த்தி வாதிடவும் கருத்துரை பெறவும் அதற்கான செலவினத்தை பாதாள சாக்கடைத் திட்ட நிதியிலிருந்து செலுத்தவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

அனுமதிக்கலாம்.

**பா.சா.தி.21927/06**

## 667. அனுமதி வழங்கப்பட்டது.

**3.** இம்மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடைத்திட்டப்பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ள போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ள 16.544 கி.மீ நீளத்திற்கான சாலைகளை சீரமைப்பதற்கு தேவைப்படும் நிதி ரூ.1047.95 இலட்சத்தினை தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவைக்கழகம், சென்னை நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு இம்மாமன்றம் தனது 29.05.2013ம் தேதிய தீர்மானம் எண்.464-ல் அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் அரசாணை நிலை (டி) எண்.419 நாள் 26.07.2013-ல் மேற்படி பணிக்கு கீழ்கண்ட நிதி ஆதாரங்களுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவைக்கழகம், கடன் தொகை | ரூ. 7.34 கோடி |
| அரசு மான்யம் | ரூ. 2.09 கோடி |
| மாநகராட்சி பொது நிதி | ரூ. 1.05 கோடி |
| **மொத்தம்** | **ரூ.10.47 கோடி** |

மேலும் மேற்படி சாலைகளை சீரமைத்தல் பணிக்கு கடன் உதவி வழங்கும் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவைக்கழகம், சென்னை நிறுவனத்தார் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு ஒப்புதல் கோரியுள்ளார்கள்.

1) Quarterly progress reports on the utilization of Grant in the prescribed format to be submitted to TNUIFSL.

2) Services, goods, equipment and material to be financed would be procured would be procured according to the procurement guidelines of IBRD.
3) In case of rehabilitation and resettlement schemes, ESF guidelines of TNUIFSL are to be followed.
4) In case of capital expenditure, the Grant Fund is to be used only to support schemes, which directly benefit urban poor. The target population specified in your loan application should not be changed. If there is any variation, especially a decrease in urban poor benefited, out grant amount will be converted to loan at interest rates currently prevailing on TNUDF loans.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ1/9993/11

**668. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**இடம்– ஈரோடு**
**நாள் –05.08.2013**

**மேயர்,**
**ஈரோடு மாநகராட்சி**